11 OCT 2

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

## GEOS 4204 அரசியற் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) அரசியற் புவியியலில் 'எல்லைகள்' என்பதனால் கருதப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) இன்று சர்வதேச அரசியலில் எல்லைகள் ஏன் முக்கியத்துவப் படுத்தப்பட்டு நோக்கப்படுகின்றன என்பதனைக் கூறி, எல்லை சார்ந்த பிரச்சனைகளினால் நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை யாதாயினும் ஒரு தென்னாசிய நாட்டினை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

02. (அ) தேசீயத்துவம் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) நாடொன்றில் ஒருங்கிணைவினை ஏற்படுத்தும் குவிமைய சக்திகளை ஒன்றிணைக்கும் அமைப்புக்கள், மற்றும் போக்குவரத்தும் தொடர்பாடலும் என்பனவற்றின் சார்பு ரீதியான வகிபங்கினை உதாரணங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

03.(அ) இராணுவக் கூட்டமைப்பு, பொருளாதாரக் கூட்டமைப்பு என்பனவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(5 புள்ளிகள்)

(ஆ) இராணுவக் கூட்டமைப்பு என்ற நோக்கங்களின் அடிப்படையில் (NATO) நேட்டோவின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(இ) உலகிற்கு எடுத்துக்காட்டக்கூடிய முறையில் “ஐரோப்பிய ஒன்றியம் பலம் பொருந்திய பொருளாதாரக் கூட்டமைப்பாக மாறிவருகின்றது.” இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? ஆராய்க.

(12 புள்ளிகள்)

## பகுதி – II

04. மக்கின்டரது இருதய நிலக்கொள்கையின் வலிமையினை தற்போதய உலக நாடுகளில் இடம்பெறும் ஆட்புல விஸ்தரிப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புபடுத்தி நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. இலங்கையின் அமைவிடம் சர்வதேச அரசியல் அரங்கில் ஏன் முக்கியப்படுத்தப்பட்டு நோக்கப்படுகின்றது என்பதனைச் சுருக்கமாக விளக்குகி இவ் அமைவிடத் தன்மையால் இலங்கை எதிர்கொள்ளும் சாதக பாதக நிலைமைகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

(25 புள்ளிகள்)

06. யாதாயினும் இரண்டிற்கு விளக்கக்குறிப்புரை எழுதுக.

1) இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலை
2) பிராந்தியக் கூட்டமைப்பு என்றவகையில் சார்க் அமைப்பின் சாதனைகள்
3) புவியியலில் அரசியல் புவியியற் கற்கையின் முக்கியத்துவம்.

(12.5 x 2= 25 புள்ளிகள்)